# MIN ALAI
# மின் அலை

July 2024 ● Volume : 12 ● Issue : 7 ● Price : Rs. 18/- ● Ann. Sub. Rs. 216/-






முன்னாள் பொதுப் பொருளாளர் பொா். G.கார்த்திகேயன். முன்னாள் நிர்வாக செயலாளர் பொா். C.ருத்ர குமார், அனல் உற்பத்தி செயலாளர் பொா். T.சுகுமார் ஆகியோரது தன்னலமற்ற சங்கப் பணிகளை பாராட்டும் விதமாக 17/07/2024 அன்று இராயப்பேட்டை தலைமை சங்க அலுவலகத்தில் பாராட்டு விழா சென்னை வடக்கு & தெற்கு மண்டலக் கிளைகளால் நடத்தப்பட்டது.

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
| --- | --- | --- |
| பொா். A.அந்தோணிபடோவராஜ் | பொா்.V.S.சம்பத்குமார் | பொா். N.R.செந்தில் |

*We request the pleasure of your presence*
*with family and friends*
*to celebrate the wedding reception of our son*

# *Venkatsrinivasan*

**with**

# *Nivedya*

**on Friday 6th September 2024**

| **Programme** | **Venue** |
| --- | --- |
| *Reception : 06:00 pm onwards*<br>*Dinner : 06:30 pm* | *Dakshina Bharat*<br>*Hindi Prachar Sabha*<br>*22A, Thanikachalam Road*<br>*T. Nagar, Chennai - 600 017* |

**V.S. Sampathkumar & Uma Sampathkumar**

*General Secretary*
*Tamil Nadu Electricity Board Engineers' Sangam*



பொர். V.S.சம்பத்குமார் 'மின் அலை' வளர்ச்சி நிதியாக ரூ.10,000/- அளித்துள்ளார். - நன்றி

ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

**ஆசிரியர் குழு**

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.ரவிசங்கர்
பொர்.S.செந்தில் முருகன்

| Page | Contents |
|---|---|
| 08 | Our Representation |
| 09 | Board Orders |
| 13 | பிரிக்கப்படும் மின் வாரியம் |
| 15 | ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் உருவாக்கம் |
| 17 | சீனியருடன் கண்ணன்– ஓர் சந்திப்பு |
| 19 | முதலாவது “மிக உய்ய அனல் மின் திட்டம்” |
| 21 | சங்க பணி ஓய்வு பாராட்டு விழா |
| 23 | ஆந்திராவின் புதிய ஓய்வூதிய திட்டம் |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்**

**மலர் 12** **ஜூலை 2024** **இதழ் 7**

## “இவர்களும் மனிதர்களே....”

மின்வாரியத்தின் முகமும் நுழைவாயிலும் பிரிவு அலுவலகங்களே. பிரிவு பணியாளர்களின் செயல்பாடுகளே மின்வாரியத்தின் இயங்கு சக்தியாக இருக்கிறது...

தமிழகத்தின் குக்கிராமங்களுக்குக் கூட எத்துறை ஊழியர்களும் செல்லாத இடங்களுக்குக் கூட சென்று பணியாற்றும்.. ஒரே அரசு ஊழியர் மின்வாரிய ஊழியர்கள் தான்.. ஆனால் பிரிவு அலுவலக பொறியாளர்களும் ஊழியர்களும் மின்வாரிய உயர் நிர்வாகத்தால் முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதுதான் கசப்பான உண்மை..

பகுத்தறிவுக்கு ஒவ்வாத வகையிலும் எதார்த்த வாழ்க்கை முறையை கருத்தில் கொள்ளாமலும் விஞ்ஞானபூர்வமற்ற பழமைவாத அடிப்படையிலும்..... நவீன நிர்வாக மேலாண்மை குறித்த எவ்வித புரிதலற்ற வகையிலும்... பிரிவுப் பொறியாளர்களும் ஊழியர்களும் மின்வாரிய உயர் நிர்வாகத்தால் ஆளப்படுகின்றனர்.

மின்வாரிய பொறியாளர்கள் பத்து அவதாரங்களுக்கு மேல் எடுக்கிறார்கள். தொழில்நுட்பம் அறிந்தவராக, சட்ட வல்லுனராக, நிதி மேலாளராக வழக்குரைஞராக, ஆடிட்டராக, விரும்பியபடி புள்ளி விவரம் தருபவராக, மக்கள் தொடர்பு அதிகாரியாக, மக்கள் குறை தீர்ப்பவராக, பொருள் மேலாண்மையாளராக, மின் தடை நீக்குபவராக, தடையற்ற மின்சாரத்தை அளிப்பவராக, மின் கட்டமைப்பை உருவாக்குபவராக, மின் சாதனங்களை பராமரிப்பவராக, சாணக்கியராக, மேலதிகாரிகளின் கட்டளைக்கு கீழ்படிபவராக.... இப்படியாக பல்துறை வித்தகராக பல்வேறு பரிமாணங்களோடு பிரிவு பொறியாளரின் பணி முறையற்று வீங்கி இருக்கிறது.

இன்றைய பிரிவு அலுவலர்கள் 24 மணி நேரமும் அலுவலகப்பணி குறித்த சிந்தனையோடு மட்டுமே வாழ்க்கை நடத்துகின்ற மன அழுத்தமான சூழல் காணப்படுகின்றது. நள்ளிரவு வரை அலுவலகத்தில் இருக்க வேண்டும்... காலையில் பிரிவு அலுவலகத்தில் பணியாற்ற வேண்டும் என்று நினைத்தால்... அப்பொழுதுதான் உயர் அதிகாரி கூப்பிட்டு சில புள்ளி விவரங்களை 10 மணிக்குள் எடுத்துக் கொண்டு வா என்று சொல்லுவார், பிரிவுப் பொறியாளரை பார்ப்பதற்கு பொதுமக்களில் சிலர் காத்திருப்பர், அப்பொழுதுதான் மாவட்ட ஆட்சியரின் அலுவலர்கள் தொலைபேசியில் கூப்பிடுவர், மக்கள் பிரதிநிதிகள் பிரிவுப் பொறியாளரை உடனடியாக வரச் சொல்லி அழைப்பார்கள்.

ஒருவர் எத்துறை எந்நிலை ஊழியராக இருந்தாலும் அவர் செய்ய வேண்டிய வேலையை அவரே தீர்மானிப்பார்– அதைப்போல எந்த தொழில் செய்பவராக இருந்தாலும் அவருடைய வேலையை அவரே தீர்மானிப்பார்– ஆனால் பிரிவு பொறியாளரால் மட்டும் தன்னுடைய வேலையை தான் நினைத்தபடி செய்ய முடியாத நிலை... பிரிவு பொறியாளரின் பணியானது பல்வேறு நபர்களால் நிர்ணயிக்கப்படுவது தான் காலக்கொடுமையாக உள்ளது.

மேலும் பிரிவு அலுவலகத்தில் எந்த ஊழியர் எந்த தவறு செய்தாலும் பிரிவு பொறியாளர்களே அதற்கு பொறுப்பேற்க வேண்டிய அவலச் சூழல் உள்ளது. உயர் அதிகாரிகளின் மெத்தனத்திற்கும் பிரிவு பொறியாளர்களே பொறுப்பேற்க வேண்டிய சூழல் உள்ளது.

இன்றைய நிர்வாக சூழல் உள்ள காலகட்டத்தில் ஒரு பிரிவு அலுவலகத்தை எந்தக் குறையும் இல்லாமல் ஒரு பிரிவு அலுவலரால் அலுவலகத்தை நடத்திடவே முடியாது என்பது தான் எதார்த்த உண்மை.

எவ்வித அறிவியல் பார்வையற்ற வகையில் பிரிவுப் அலுவலக பணிச்சூழல் செயற்கையாக கட்டமைக்கப்பட்டுள்ளது. எந்த பிரிவு பொறியாளர் மீதும் எப்போது வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம் என்பதுதான் பிரிவுப் பொறியாளருக்கு உள்ள மன அழுத்தச் சூழல்... இத்தகைய அவலமான சூழல்... மின்வாரிய பிரிவுப் பொறியாளர் என்கிற தனி மனிதனை மன அழுத்தத்திற்கு உள்ளாக்கி, உடல் நலம் மற்றும் மனநலம் பாதிக்க வைக்கிறது.. இதற்கு மேலாக குடும்ப உறவுகளையும் பாதிக்க வைக்கிறது.. மேலும் இத்தகைய முறையற்ற பணிச் சூழலானது பிரிவு அலுவலகங்களில் செயல்பாட்டையே மிக மோசமாக பாதித்துள்ளது.

இதனால் நேரடியாக பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.. அதனால் பொதுமக்கள் மின்வாரியத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை கெடுவதோடு மட்டுமல்லாமல் மின்வாரியத்திற்கு அவமரியாதையும்.. அவப்பெயரையும் ஏற்படுகிறது.

தமிழக அரசின் நோக்கத்தை மின்வாரியம் நிறைவேற்ற வேண்டுமென்றால்... மக்களுக்கான பணியினை சிறப்பாக செய்ய வேண்டுமென்றால்... நல்ல வலுவான கட்டமைப்பு நிர்மாணிக்கப்பட வேண்டுமென்றால்... மின்வாரியப் பிரிவுப் அலுவலக பணியை முறைப்படுத்திட வேண்டும்... முறைப்படுத்தப்பட்டால் அது தமிழக அரசுக்கும் நற்பெயரை அமைத்துக் கொடுக்கும்.

பிரிவுப் அலுவலர்களின் அழுகுரலுக்கு மதிப்பளிக்க வேண்டும். மின்வாரியத்தின் முகமாக நுழைவாயிலாக இருக்கின்ற பிரிவு அலுவலகங்களின் பணிச்சுமையை விஞ்ஞான ரீதியாக நவீன மேலாண்மை கண்ணோட்டத்தோடு மறுசீராய்வு செய்து புனரமைக்க வேண்டியதே இன்றைய அவசிய அவசர தேவை.

# பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே!

வணக்கம்.

கடந்த 11.07.2024 அன்று நீண்ட இடைவெளிக்குப் பின் மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், வாரியத்தில் சமீப காலமாக ஏற்பட்டு வரும் நிர்வாக மாற்றங்கள், புதிய நிறுவனங்கள் பிரிப்பு, கொள்கை முடிவுகள், நிலுவையிலுள்ள வேலை பளு பேச்சுவார்த்தை ஆகியவைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. காலச்சூழலுக்கு ஏற்ப பிரதான கோரிக்கைகள் குறித்து வாரியத் தலைவரிடம் கூட்டு முறையீடு செய்திட முடிவெடுக்கப்பட்டது.

கூட்டு நடவடிக்கை குழு முடிவின்படி, கடந்த 22.07.2024 அன்று வாரிய தலைவரை சந்தித்து கீழ்கண்ட பிரதான கோரிக்கைகள் குறித்து கூட்டு முறையீடு அளிக்கப்பட்டது.

- ஆரம்ப நிலை காலி பணியிடங்களை நிரப்புதல்
- வேலை பளு பேச்சுவார்த்தையை உடனே துவங்கிட
- வாரிய ஆணை 4 மற்றும் Redeployment –ஐ மறுபரிசீலனை செய்திட
- ஓய்வூதிய நிதியம் அமைத்திட

மற்றும் வாரியத்தில் சமீப காலமாக மேற்கொள்ளப்பட்டு நிர்வாக சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து விவாதித்திட பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்கிட வாரிய தலைவரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. வாரியத் தலைவர் அவர்களும் வரும் 01.08.2024 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு கூட்டு நடவடிக்கை குழுவுடன் திட்டமிட்ட பேச்சு வார்த்தைக்கு நேரம் ஒதுக்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் 23.07.2024 அன்று கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் 01.08.2024 அன்று நடைபெறவுள்ள திட்டமிட்ட பேச்சு வார்த்தையில் விவாதிக்கப்பட வேண்டியவை குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட்டது.

25.07.2024 அன்று மின்வாரிய தலைமையகத்தில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை கூட்டுக் குழுவின் சார்பில் சந்தித்து பிரதான கோரிக்கைகள் குறித்து முறையீடு அளித்து, பேச்சுவார்த்தை நடத்திட கோரிக்கை வைக்கப்பட்டது. மின்துறை அமைச்சர் அவர்கள் வாரிய தலைவருடனான பேச்சுவார்த்தைக்கு பிறகு அமைச்சருடனான பேச்சுவார்த்தை நடைபெறும் என்று தெரிவித்தார்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக, தொழிற்சங்க பணியாற்றி இந்த ஆண்டு பணி ஓய்வின் காரணமாக தொழிற்சங்க பணிகளிலிருந்து விடைபெறும் முன்னாள் மையப் பொறுப்பாளர்கள் பொர்.G.கார்த்திகேயன், முன்னாள் பொதுப்பொருளாளர், பொர்.C.ருத்ரகுமார், முன்னாள் நிர்வாக செயலாளர் மற்றும் பொர்.T.சுகுமார், செயலாளர் /அனல் மின் உற்பத்தி ஆகியோரது தன்னலமற்ற தொழிற்சங்க பணிகளை பாராட்டும் விதமாக கடந்த 17.07.2024 அன்று இராயப்பேட்டை பொன்விழா சங்க கட்டிடத்தில் எழில் மிகு பாராட்டு விழா, சென்னை வடக்கு மற்றும் தெற்கு மண்டல கிளைகளின் சார்பாக நடத்தப்பட்டது. காலை 11:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை நடைபெற்ற பாராட்டு விழாவில் மாநிலத் தலைவர், பொதுச்செயலாளர், பொதுப்பொருளாளர், மண்டல செயலாளர்கள் உள்ளிட்ட மைய பொறுப்பாளர்கள் கிளைச் செயலாளர்கள்,

பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மூத்த பொறியாளர்கள், ஓய்வு பெற்ற பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள் திரளான எண்ணிக்கையில் கலந்து கொண்டு மூவருக்கும் மிக சிறப்பான பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் நல்கினார்கள்.

அரசாணை எண் 6 மற்றும் 7 நாள் 24.01.2024 ன்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பிரிக்கப்பட்டு மேலும் 2 புதிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து TAMIL NADU POWER GENERATION LIMITED மற்றும் TAMIL NADU GREEN ENERGY CORPORATION LIMITED என்ற இரண்டு புதிய நிறுவனங்களுக்கு தனித்தனியாக பணியமைப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ள புதிய பணியிடங்கள் Redeployment வாயிலாக நிரப்பிட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. புதிய நிறுவனங்கள் பிரிக்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) பெயர் மாற்றத்துடன் TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED (TNPDCL) என்ற புதிய பெயரில் செயல்படும் என்று உரிய உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

மின் தொடர் அமைப்புக் கழக துணை மின் நிலைய பணியிடங்கள் மறு சீரமைப்பு வாரிய ஆணை 4 நாள் 05.03.2024 மீது உரிய திருத்தங்கள் மேற்கொள்ள சங்கத்தின் சார்பாக கொடுக்கப்பட்ட முறையீடுகளைத் தொடர்ந்து, இரண்டு முறை வாரிய தலைவர், மேலாண்மை இயக்குனர் / மின் தொடரமைப்பு கழகம் மற்றும் பணியமைப்பு அதிகாரிகள் ஆகியோர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

மீண்டும் இரண்டு முறை மேலாண்மை இயக்குனர் / மின் தொடரமைப்பு கழகம் (பொறுப்பு) மற்றும் இயக்குனர் / விநியோகம் (பொறுப்பு) ஆகியோருடன் வாரிய ஆணை 4ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள விரிவாக விவாதித்துள்ளோம், வாரிய தலைவர் அவர்களும் விரைவில் இது குறித்து உரிய திருத்தங்கள் செய்வதாக உறுதியளித்துள்ளார்.

வாரிய தலைவர் சந்திப்பின்போது நிலுவையில் உள்ள பதவி உயர்வுகள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனம் குறித்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக இளநிலை பொறியாளர் மின்னியல் / முதல்நிலை காலி இடங்களை உடனடியாக நிரப்பிடவும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. வாரிய தலைவர் அவர்களும் இளநிலை பொறியாளர் மின்னியல் / முதல்நிலை பதவி உயர்வுகள் உடனடியாக Call for செய்ய உத்தரவிட்டு உள்ளார்கள். விரைவில் Call for எதிர்பார்க்கப்படுகிறது.

இளநிலை பொறியாளர் மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்விற்காக கோரப்பட்டுள்ள தகவல்கள் இதுவரையில் முழுமையாக வந்தடையவில்லை, சுமார் 10 வட்டங்களில் இருந்து தகவல்கள் தலைமையகத்தை வந்தடையவில்லை. பொறுப்பாளர்கள் தகவல்கள் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதை உறுதி செய்திட வேண்டுகிறேன்.

இளநிலை பொறியாளர் / இயந்திரவியல் இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை பதவி உயர்விற்கு இடைக்கால தடை நிலுவையிலிருக்கும் நீதிமன்ற வழக்கினை விசாரணைக்கு பட்டியலிட வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாரிய தரப்பிலும் இது குறித்து உரிய நீதிமன்ற நடவடிக்கைகளை விரைவுப்படுத்திட பொறியாளர் சங்கத்தால் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வுக்கான PAR இன்னும் 10 நபர்களுக்கு கிடைக்கப்படவில்லை. கிளை பொறுப்பாளர்கள் உரிய கவனம் செலுத்திட

கேட்டுக் கொள்ளப்படுகிறது. DPC நடவடிக்கைகளை இறுதி செய்திட பணியமைப்பு நிர்வாகத்தை சங்கத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வில் உள்ள நீதிமன்ற தடை உத்தரவினை நீக்கிட பொறியாளர் சங்கம், நிர்வாகத்துடன் இணைந்து முயற்சி செய்து வருகிறது.

நம்மைச் சுற்றிலும் தொடர்ந்து மாற்றங்கள், சீரமைப்பு நடவடிக்கைகள் என வாரியத்தின் தன்னிச்சையான கொள்கை முடிவுகள், பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களின் பணிச்சுமையை அதிகரிப்பதுடன் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து தொழிற்சங்க நடவடிக்கைகளை விழிப்புடன் கையாள வேண்டிய இக்கட்டான தருணத்தில் பணியாற்றி வருகிறோம் என்பதனை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

அனைவரும் தொடர்ச்சியாக மாதம்தோறும் கிளைகளில் நடைபெறும் முதல் செவ்வாய்க்கிழமை செயற்குழு கூட்டங்களில் கலந்து கொண்டு தங்களைக் காலச் சூழலுக்கு ஏற்ப அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

இந்த மாதத்தில் இதுவரை 37 கிளைகளில் மாதாந்திர கூட்டம் நடைபெற்றுள்ளது. இனி வரும் மாதங்களில் 45 கிளைகளிலும் தவறாமல் நடத்திட கேட்டுக்கொள்கிறேன்.

விழிப்புடன் இருப்போம்! வாரியம் காப்போம்!

நன்றி

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

**பொதுத்தேர்வில் சாதனை படைத்த வாரிசுகளுக்கு பாராட்டுக்கள்**

2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில், தமிழ் மொழிப் பாடத்தில் முதல் மதிப்பெண் (100/100) பெற்ற பொர்.S.நல்லமுத்து, கிளை செயலாளர்/ கோபி அவர்களின் மகள் செல்வி.N.மதுமிதா அவர்களுக்கு சென்னையில் 14.06.2024 அன்று தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பாராட்டு சான்றிதழும் பரிசும் வழங்கப்பட்டது. இரண்டு பாடங்களில் சதத்துடன் 495/ 500 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

மேலும் பொர்.P.M.மாரியப்பன், தலைமை நிலைய செயலாளர் அவர்களின் மகள் செல்வி.M.மதுமிதா அவர்களும் இரண்டு பாடங்களில் சதத்துடன் 495/500 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

தங்களது அயராத உழைப்பினால் உயர்வு பெற்ற மாணவிகள் இருவருக்கும், இதற்கு உறுதுணையாய் இருந்த அவர்களுடைய பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் பொறியாளர் சங்கம் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

சங்க வாரிசுகளின் சாதனை பயணம் தொடர்ந்திட வாழ்த்துக்கள்...

## OUR REPRESENTATION

To

**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**

TANGEDCO,

Chennai-600 002.

Lr.No.GS/ TNEBES/ F1/ D.03 / 2024, Dt.01.07.2024.

Respected Sir,

**Sub :** Junior Engineer / Electrical I Grade Promotions –Calling for of fresh Panel – requested regarding.

**Ref :** Lr.No.GS/ TNEBES/ F1/ D.44/ 2024, Dt. 20.02.2024.

Huge backlog exists in Junior Engineer / Electrical I Grade posts. Based on our Sangam's persistent representation to set right the backlog in Junior Engineer / Electrical I Grade posts, suitability report was called among 1129 Junior Engineer / Electrical II Grade for promotion to the post of Junior Engineer / Electrical I Grade last year.

Promotion orders were issued to just 658 persons in 3 batches after the insistence of the respected Chairman cum Managing Director. We are grateful to the respected Chairman cum Managing Director towards the same.

In the said called for list DPC wasn't conducted for 300 persons. Our repeated representations to conduct DPC for the remaining 300 persons had gone unheeded. Hence we had represented for a fresh call for vide our representation cited above a couple of months ago, which too is yet to be considered.

At this juncture we reiterate Calling – for of fresh Panel under the revised crucial date at least now to set right the backlog, for which we pray the intervention of the respected Chairman cum Managing Director to instruct the respected Chief Engineer / Personnel suitably and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,

**(V.S.SAMPATH KUMAR)**

General Secretary.

## திருமண அழைப்பிதழ்



மணமகன்

**திரு. மா.தியாகராஜன்**

AEE / E / EM2 / NCTPS-II NCTPS Branch (Retd.,)

Mobile: 89733 03420

**திருமதி. மின்னல்கொடி**

ஆகியோரின் மகன் திருநிறைச்செல்வன்

**தி. விக்னேஷ்** B.E. (EEE)

Deputy Senior Engineer DELPHI-TVS, Chennai

என்கிற மணமகனுக்கும்

மணமகள்

**திரு.சோ.குமரவேல்**

**திருமதி. செம்மனச்செல்வி**

ஆகியோரின் மகள் திருநிறைச்செல்வி

**சுவாதி (எ) கு. தனலெட்சுமி** M.Sc, B.Ed.

என்கிற மணமகளுக்கும்

**சுபமுகூர்த்தம் :** 05.09.2024 வியாழக்கிழமை

காலை 9.00 – 10.30 மணிக்குள்

**இடம் : தீர்க்க சுமங்கலி திருமண மஹாலில்**

**இராமநாதன் பேருந்து நிறுத்தம் அருகில், தஞ்சாவூர்**

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

## TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD.
## TECHNICAL BRANCH

144, Anna Salai,
Chennai-2.

**Memo No.CE/Coml/SE/EE3/AEE2/F.Temporary supply SD/D.No.342/ 2024. dt.4.7.2024.**

**Sub:** TANGEDCO- Effecting of temporary supply -Collection of Security deposit for Temporary supply category as per the latest TNERC amendment- Application for temporary supply for Government projects in the name of applicant and not in the name of the contractors- Instruction issued- Regarding.

**Ref:**
1. MemoNo.CE/ Comml/ SE/ Comml/ EE3/ AEE2/ F.Pig. Per/ D139/ 2020, dt.04-07-2020.
2. MemoNo.CE/ Coml/ SE/ EE3/ AEE3/ F Onilne Appin./ FLMCM/ 90/ 2021, dt.24.02.2021
3. TNERC Notification No. TNERC/DC/8-29, dated 08-09-2023.
4. Note approved by CMD/TANGEDCO on 27.06.2024.

Hon'ble TNERC has made amendment in Supply and Distribution Code and the same was notified on 08-09-2023. In TNE Distribution code, the Hon'ble TNERC has substituted the Regulation 39 (2) (ii), Collection of Security deposit in case of providing supply purely for temporary purpose.

For providing supply purely for temporary purpose the Security Deposit equivalent to two times of the tariff charges for the consumption as calculated below shall be collected and maintained throughout the temporary supply period:

Security Deposit = 2LLFHDT

Where,

L = Connected load in kW

LF = Load factor = 0.5

H = Number of hours of a day = 8 hours

D = Number of days of billing cycle period as specified in Regulation 8(1) of the Supply Code / proposed period of use whichever is less.

T = Tariff rate of temporary supply as specified by the Commission from time to time."

In this regard the following instructions are issued:

a) For providing supply Purely for temporary purpose the calculation as per the latest TNERC amendment (TNE DC Regulation 39(2) (ii), given above may be followed.

b) For the temporary supply connections to be converted to permanent supply connections related to Government projects which are executed by the contractors, it shall be ensured that necessary application and payment are received only from the applicant and not from the contractors and no connection to be given in any contractors name if the work is related to Government Departments.

The Chief Engineer's/Distribution are requested to instruct all the officers down the level to follow above instruction scrupulously. Any lapses in this regard shall be viewed seriously and action as deemed fit will be taken against the erring officials.

**DIRECTOR/ DISTRIBUTION (FAC).**

**TAMILNADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD**

O/o. Director/Distribution,
Chennai-600002.

**Memo No.CE/IT/SE/IT2/EE-I/IT/AEE/F.MobileApp/D.No.559 /24,Dt. 05.07.2024.**

**Sub:** IT LT Billing S/W New Android Mobile App for the Field Officers / Staff of the Distribution Sections-'Go Live' and Implementation in all section offices - Instructions - Communicated - Reg.

A new Android based Mobile app has been developed for the Field Officers / Staff Distribution Sections for carrying out various day to day tasks and its tracking. The Mobile App is named as Field staff Mobile App (FSMApp). The following activities are enabled in the mobile app:

1. Application Related - New Service - Meter Installation.
2. Disconnection Entries
3. Reconnection Entries
4. Meter change for Defective meters/ Additional load/Reduction of load.
5. Consumer complaints -Attending / Closing
6. Inspection/Check Reading Entry
7. View Consumer details
8. Basic Abstract Reports of above activities.
9. Exception Report for Inspection Purposes.
10. User Creation (For Admin users).

Based on the successful outcome of the pilot study done in 88 sections, it is proposed to extend the facilities to all the sections.

Directions for installation, user creation, usage information and screenshots of the functions available are enclosed. The APP installation file (.apk) would be shared by the IT wing to the respective circle IT Managers separately.

Hence, all the Chief Engineers / Superintending Engineers / Distribution are hereby instructed to implement the utilization of the FSMAPP in all the sections / other related offices of their jurisdiction. The Chief Engineer / IT & RAPDRP may be addressed for any further requirements or for resolving any technical issues.

A report on the implementation status may be sent to the Chief Engineer / IT & RAPDRP by 01-Aug-2024.

Sd/-05.07.2024
Director (Distribution) (FAC)

**கட்டட நிறைவு சான்றிதழ் – தளர்வு**

14 மீட்டர் உயரம் மிகாமல் உள்ள 8 குடியிருப்பு அலகுகள் அல்லது 750 சதுர மீட்டர் பரப்பளவுக்கு உட்பட்ட குடியிருப்பு கட்டடங்களுக்கு கட்டட நிறைவு சான்றிதழ் தேவையில்லை.

14 மீட்டர் உயரத்துக்கு மிகாமல் 300 சதுர மீட்டர் கட்டட பரப்பளவுக்கு உட்பட்ட வணிக கட்டடங்களுக்கும் கட்டட நிறைவு சான்றிதழ் தேவையில்லை.

அனைத்து தொழிற்சாலை கட்டடங்களுக்கும் கட்டட நிறைவு சான்றிதழ் தேவையில்லை – மின்வாரிய உத்தரவின்படி

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD, TECHNICAL BRANCH**

144, Anna Salai,
Chennai - 2.

**Memo No.CE/Comml/SE/Comml/EE3/AEE2/F.CC/ D.No. 341/2024/, dt. 05.07.2024.**

**Sub:** Electricity Amendment made to the Tamil Nadu Combined Development and Building Rules, 2019 Exemption of small commercial buildings from obtaining Completion Certificate - G.O. Issued vide GO.No.123, dt 28-06.2024 - Notification - Instruction issued - Regarding

**Ref:** 1. G.O.Ms.No.18, Municipal Administration and Water Supply (MA.I) Department, dated 04-02-2019.
2. TANGEDCO's Memo No.CE/ ComI/SE/EE3/AEE2/F.Plg.Per/D-139/2020 dated 04-07-2020.
3. Memo No.CE/Comml/SE/Comml/EE3/AEE2/F.CC/FLM-CM/06/2024/, dated. 15.03.2024.
4. G.O.Ms.No.123, Housing and Urban Development (UD4(1)) Department dated 28-06-2024
5. Note approved by CMD/TANGEDCO on 05-07-2024.

The Housing and Urban Development (UD4(1)) Department have made the following amendments to the Tamil Nadu Combined Development and Building Rules, 2019 and the same was notified in the TN Government Gazette vide G.O.Ms.No.123, Housing and Urban Development (UD4(1)) Department dated 28-06-2024.

(1) In rule 20 in sub rule (1), after the expression" not exceeding 8 dwelling units or 750 sq.m", "the expression "commercial buildings of built up area upto 300 sq.m. not exceeding 14m in height" shall be substituted;

(2) In rule 35 in sub rule (21), in clause(c), after the expression "not exceeding 8 dwelling units or 750 sq.m", the expression "commercial buildings of built up area upto 300 sq.m. not exceeding 14m in height shall be inserted;

(3) In rule 39, in sub rule (12), in clause(c), after the expression "not exceeding. 8 dwelling units or 750 sq.m", the expression "commercial buildings of built up area upto 300 sq.m. not exceeding 14m in height" shall be inserted;

(4) In Annexure-XXIII, in item (2), in sub-item(a), the expression "or upto 300sq.m of commercial building" shall be deleted.

Based on the above Government order issued on 28-06-2024 the following instructions are issued in modification of para 6(a) issued vide Memo dt.04-07-2020 for strict adherence

1. Except residential building upto 14m in height not exceeding 8 dwelling units or 750 sq.m, commercial buildings of built up area upto 300 sq.m. not exceeding 14m in height, and all type of Industrial buildings, all other buildings requires completion certificate before effecting electricity service connections. All other conditions contained in the instruction issued vide ref (2) remain unaltered.
2. For the exempted buildings, the provisions contained in the Tamil Nadu Electricity Distribution Code, 2004 shall be followed scrupulously.
3. For exempted residential building, commercial buildings, and all type of Industrial buildings the Completion Certificate need not be insisted.

In this connection, all the Chief Engineer/Distribution Regions and the Superintending Engineer/EDCs are requested to instruct all the officers down the level to follow above instruction scrupulously. Any lapses in this regard shall be viewed seriously and action as deemed fit will be taken against the erring officials.

**DIRECTOR/ DISTRIBUTION (FAC).**

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED (TNPDCL)**

From
B.Rajeswari., B.com, FCMA.,
Chief Financial controller/ Regulatory
Cell 144,
Anna Salai Chennai 600002.To

The Chief Engineers/Regions
The Superintending Engineers/EDCS
The Superintending Engineer/CDC
The Superintending Engineer/Schemes/ TANGEDCO
The Superintending Engineer/ Mettur Workshop

**Letter No.CFC/Reg. Cell/FC/F. Restructuring/D.No. 29/2024 dated 03.07.24.**

Sir/Madam,

**Sub:** Restructuring of TANGEDCO- Name change from TANGEDCO to TNPDCL subsequent to formation of TNPGCL and TNGECL- Approved by ROC/Ministry of Corporate Affairs communicated -Reg.

**Ref:** 1. G.O Ms No.6 dt. 24.01.2024
2. G.O Ms No.7 dt. 24.01.2024
3. G.O Ms No.32 dt.06.03.2024

Kind attention is invited to Government of Tamil Nadu (GoTN) order under references (1) and (2) cited where in TANGEDCO was demerged and 2 new companies have been formed as below.

1.1 Tamil Nadu Power Generation Corporation Limited (TNPGCL)

1.2 Tamil Nadu Green Energy Corporation Limited (TNGECL)

2.0 In the reference 3d cited above the GoTN has notified the transfer Scheme of transferring the assets, liabilities and personnel of transferor company TANGEDCO to newly formed TNPGCL and TNGECL respectively.

1.0 It is informed that subsequent to formation of TNPGCL and TNGECL, Registrar of Companies/Ministry of Corporate Affairs has approved the name change from TANGEDCO to Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL) on 27.06.2024.

4.0 In view of the above, the following Instructions are issued for adherence.

4.1 The above changes may be circulated among officials and staffs at Circle/Division/Sub Division and Section level.

4.2 All communications may be made in the name of Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL) to which the respective office is attached.

4.3 All Name Boards/Letter heads etc may be modified accordingly.

4.4 All the contractors/Suppliers (Vendors)/Customers with whom TANGEDCO had contracts, rights, deeds, schemes, bonds, agreements shall be informed of the name change, apart from clearly mentioning that the Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL) will henceforth be liable and responsible for the obligations arising out of such instruments. A draft letter as template is attached.

4.5 As for as maintenance of books of accounts are concerned there will not be change as the entire circle/Accounts rendering unit so far carrying out distribution works are allotted to TNPDCL.

4.6 All new specifications/RFP/RFQs etc shall be prepared and called for in the name of TNPDCL. All new Purchase orders/work awards etc shall be prepared and issued in the name of TNPDCL

4.7 Instruction for name change in collection account and drawing account will be issued from Head Quarters Funds section.

4.8 Instructions for name change in TAN number & GSTIN number for TDS deduction & remittance will also be issued by Head Quarters Taxation Wing.

The Chief Engineers/Superintending Engineers are requested to arrange to circulate this communication and issue suitable instructions to the officers concerned to take further course of action on the above immediately.

Chief Financial Controller
Regulatory Cell

## பிரிக்கப்படும் மின் வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சார சட்டம் 1948–ன் படி ஒரே பொதுத்துறை நிறுவனமாக கடந்த 2010 வரை செயல்பட்டு வந்தது.

மின்சார உற்பத்தி, மின் தொடரமைப்பு, மின் விநியோகம் என அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்து தனி உரிம உள்ளதாக (Monopoly) செயல்பட்டு வந்தது.

மின்சார சட்டம் 2003–ன் படி பல்வேறு மாநிலங்கள் மின் வாரியத்தை நிறுவனங்களாக பிரித்து மாற்றியது. அதனை தொடர்ந்து தமிழ்நாடும் கடந்த 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியம், மின் வாரிய நிறுவனமாக மாற்றப்பட்டு அதன் கீழ் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் மின் தொடரமைப்பு கழகம் ஆகியன செயல்பட்டுவந்தன.

தற்போது மீண்டும் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூன்று நிறுவனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இனி தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை மின் உற்பத்தி கழகம் என மூன்று நிறுவனங்களாக இயங்கும்.

இதில் மின் பகிர்மான நிறுவனம் தமிழ்நாட்டில் மின் விநியோகத்தையும், மின் உற்பத்தி கழகம் மரபு சார்ந்த மின் உற்பத்திகளான அனல், எரிவாயு மின் உற்பத்திகளையும், பசுமை மின் உற்பத்தி நிறுவனம் மரபு சாரா மின் உற்பத்திகளான புனல், காற்றாலை, சூரிய மின் உற்பத்தி போன்றவற்றையும் கவனிக்கும்.

தற்போது மொத்தம் ஐந்து நிறுவனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது இதனால் நிர்வாகம் எளிதாகும் எனவும், கடன் சுமை குறையும் எனவும் கூறப்படுகிறது. மேலும் தமிழ்நாடு மின் வாரியத்தில் இயங்கும் இந்த ஐந்து நிறுவனங்களும் தொடர்ந்து அரசின் பொதுத்துறை நிறுவனங்களாக செயல்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இது குறித்து சமீபத்தில் நடந்த தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கத்தின் மாநில பொதுக்குழுவில் விவாதிக்கப்பட்டது.

மின்துறை மேலும் பிரிக்கப்பட்டது சங்கத்திற்கு உடன்பாடு இல்லை என்ற போதிலும், பிரிக்கப்பட்டுவிட்ட இந்த சூழலில் நம் பொறியாளர்கள், தொழிலாளர்கள் நலன் பாதுகாக்க வேண்டிய நிலையினை விவாதித்தனர்.

பிரிக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களும் அரசின் பொதுத்துறை நிறுவனங்களாக தொடர்ந்து செயல்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழ் நாடு முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்த நிறுவனங்களில் பணியாற்றும் பொறியாளர்கள் மற்றும் ஊழியர்களின் பணி பாதுகாப்பு மற்றும் பதவி உயர்வுகள் உறுதி செய்யவும், தொழில் நுட்ப உதவியாளர் மற்றும் உள்முகத் தேர்வு மூலம் உதவிப் பொறியாளர் நியமனங்களை விரைந்து செய்ய வேண்டும் என்றும் கோரிக்கையும் வைக்கப்பட்டது.

எனவே லாப நோக்கு இன்றி அரசின் திட்டங்களையும், சிறப்பான மின் விநியோகத்தையும் மக்களிடம் கொண்டு செல்லும் மின் வாரிய அனைத்து நிறுவனங்களும் தொடர்ந்து பொதுத்துறை நிறுவனங்களாக செயல்பட வேண்டும் என்றும் மக்கள் நலன் மற்றும் ஊழியர்கள் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் பொறியாளர் சங்கம் தொடர்ந்து போராடி வலியுறுத்திவருகிறது. இனியும் பொறியாளர் நலன் காக்க சங்கம் தொடர்ந்து போராடும்.

"இப்படை தோற்கின் எப்படை வெல்லும்".

முனைவர்.சா.சம்பத்
மாநில அமைப்பு செயலாளர்

## Salary hike of Maharashtra State Electricity Board employees

Mumbai. Newspaper statement dated 07.07.2024: Pending salary hike of electricity employees was negotiated with Hon'ble Deputy Chief Minister Devendra Fadnavis and Energy Minister and announced salary hike of Rs.1570.47 crore 68,045 thousand employees, engineers, officers and assistants in the divided generation, transmission and distribution power companies of the Maharashtra State Electricity Board.The agreement for salary increase of the workers was pending from 1.4.2023. Negotiation meeting regarding this increase was held on 07.03.2024, Mr. Devendraji Fadnavis was at the level of Deputy Chief Minister and Energy Minister. In this negotiation, he said about giving 15 percent increase in basic salary and 100 percent in allowances to the electricity employees. Due to this, after the increase in basic salary and allowances, the financial burden will be Rs.1435 crores on the companies.He had explained. However, since the increase made by the trade unions was a factor of dissatisfaction. There was displeasure among the employees. On behalf of the trade unions, the action committee requested the Hon'ble Deputy Chief Minister to meet at Nagpur and find a way. In the meantime, due to the introduction of the code of conduct of the Lok Sabha, the salary hike negotiations were closed for the last 4 months.

Maharashtra State Electricity to sign the salary increment agreement immediately. On behalf of the Joint Action Committee of Employees, Engineers, Officers, a notice of serial agitation was given to the administration. Huge door meetings were held across Maharashtra on June 24th and June 28th and on July 4th. Action committee decided to go on indefinite strike from July 9.

In the background of this strike on 7.07. 2024 under the chairmanship of Mr. Devendraji Fadnavis Deputy Chief Minister and Minister of Energy and Mr. Abha Shukla Upper Chief Secretary (Energy), Mr. LokeshChandra (Maha distribution), Mr. Sanjay Kumar (Maha pareshan) and Dr. P. Anbalgam (Maha Nirmidhi) Chairman and Managing Director of all the three power companies, Mr. Director (Maas) and Chief Industrial Relations Officer attended the meeting. In this meeting the final negotiations were Hon.Deputy Chief Minister and Energy Minister. Salary increase announced as follows. 1) The basic pay of employees, engineers and officers will be increased by 19%. 2) 25 percent increase in all allowances to employees, engineers and officers was agreed. 3) Support staff appointed on 3 year contract basis was given increment of Rs.5000. 4) It was dec ided to pay additional Rs.1000 to the technical staff working on the line. 5) PendingSubject wise soon the anonymous committee will decide on the time bound programme.

Officers of the following six trade unions were present in the meeting held with Hon'ble Minister of Energy. Vdarsabha should be held in Maharashtra tomorrow on Monday 08.07.2024 after satisfactory salary increase 1) Maharashtra State Electricity Workers Federation Comrade Mohan Sharma (President), Comrade Krishna Bhoyer (General Secretary) 2)Maharashtra State Electricity Workers Federation Mr. Arun Tsalun (General Secretary), Prashant Bhamburdekar Deputy General Secretary. 3) Mr. Kedar Relekar (President), Mr. Satosh Khoomkar (General Secretary) of Subordinate Engineers Association. 4) Mr. Ravindra Bari (President), Mr. RT Devkanth (General Secretary) of Electricity Sector Technical Workers Union 5) Dattatraya Gutte (Chief Secretary General), Suresh Devkar of Maharashtra State Power Workers Congress (INTC)(General Secretary). 6) Mr. Sanjay More (Working President), Mr. Premanand Maurya (General Secretary) of Maharashtra State Backward Class Electricity Employees Association. Yours sincerely Victory to Maharashtra State Electricity Workers, Engineers, Officials Joint Action Committee.

Newspaper Content Dated 07.07.2024

## வரலாற்றில் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் உருவானது எப்படி

தெரிந்து கொள்வோம்....

ஒரு ஆண்டில் 12 மாதங்கள் இருப்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் ஒரு காலத்தில் ஒரு ஆண்டில் பத்து மாதங்கள் மட்டுமே இருந்தன. ஜூலை, ஆகஸ்ட் மாதங்கள் பின்னால் சேர்க்கப்பட்டவை.

எங்களுக்கும் காலம் வரும் என்று சொல்வார்கள். ஆனால் அதிகார பலம் யாரிடம் இருக்கிறதோ அவர்களால் காலத்தையே மாற்றி அமைக்க முடிகிறது. அப்படித்தான் ஜூலையும் ஆகஸ்டும் பிறந்தன.

கி.மு. முதல் நூற்றாண்டில் ரோமப் பேரரசு (Roman Empire) மாபெரும் அரசாக உருவெடுத்தது. ஐரோப்பாவிலும் மத்தியதரைக் கடல் பகுதியிலும் பரவியிருந்த சாம்ராஜ்யம் இது. 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த ரோமக் குடியரசை (கிமு 510 – கிமு 1ம் நூற்றாண்டு) அடுத்து ரோமப் பேரரசு ஆட்சிக்கு வந்தது. குடியரசில் இருந்து பேரரசாக மாறிய காலகட்டத்தைப் பற்றி ஆதாரபூர்வமான தகவல்கள் இல்லை. ஐரோப்பாவிலும் மத்தியதரைக் கடல் பகுதியிலும் பரந்து விரிந்த நிலப்பரப்பு இந்த அரசின் கீழ் இருந்தது. பல நூற்றாண்டுகள் இந்தப் பேரரசின் ஆட்சி நீடித்து நின்றது. மொழி, சமயம், கட்டடக் கலை, மெய்யியல், சட்டம், அரசு நிர்வாகம் ஆகிய துறைகளில் இந்தப் பேரரசு சிறந்து விளங்கியது. இவற்றின் சிறப்புகள் இன்றுவரை பேசப்பட்டுவருகின்றன.

இந்தப் பேரரசின் மன்னனாக கி.மு 44இல் ஜூலியஸ் சீசர் முடி சூடினார். இவர் உலக வரலாற்றின் குறிப்பிடத்தக்க தலைவர்களுள் ஒருவர். ரோமர்களின் நாட்டை ரோமானியப் பேரரசாக மாற்றியமைத்ததில் இவரது பங்கு மிக முக்கியமானது.

தற்போது நாம் பயன்படுத்தும் ஆங்கில காலண்டரை கிரிகோரியன் காலண்டர் என்று சொல்வார்கள். இந்த காலண்டர் உருவாவதற்கு முன்பு ரோமானியர்களின் ஜூலியன் காலண்டர்தான் பரவலாகப் புழக்கத்தில் இருந்தது. ஜூலியன் காலண்டரில் காணப்பட்ட குறைபாடுகளை அலோயிஷியஸ் ல்லியஸ் என்னும் மருத்துவர் 1582ஆம் ஆண்டில் திருத்தியமைத்தார். பதிமூன்றாம் போப் ஆண்டவராக இருந்த கிரிகோரியின் ஆணைப்படி இந்தத் திருத்தங்கள் செய்யப்பட்டதால் இந்தக் காலண்டர் கிரிகோரியன் காலண்டர் என்னும் பெயர் பெற்றது.

இந்த கிரிகோரியன் காலண்டரின்படி, ஜூலை மாதம் ஏழாம் மாதம் என்பது நமக்குத் தெரியும். இதற்கு ஜூலை என்ற பெயர் வந்ததற்குக் காரணமே ஜூலியஸ் சீசர்தான். முன்பெல்லாம் ஆண்டுக்கு 10 மாதங்கள். ஒவ்வொரு மாதத்துக்கும் சுமார் 36 நாட்கள். ரோமானியக் காலண்டரில் 'கிவின்டிலிஸ்' (ஐந்தாவது) என்ற பெயரில் இருந்த மாதத்திற்கு 31 நாட்கள் என்று ஜூலியஸ் சீஸர் கி.மு. 46இல் நிர்ணயம் செய்தார். இந்த மாதத்தில் தான் ஜூலியஸ் சீசர் பிறந்தார் என்பதால், அவரை கவுரவிக்கும் விதமாக இதற்கு ரோமானிய செனட் உறுப்பினர்கள் இந்த மாதத்துக்கு 'ஜூலியஸ்' என்று பெயரிட்டனர். அதுவே நாளடைவில் ஜூலை என்று ஆனது

அதுவரை ஏழாம் மாதமாக இருந்த செப்டம் (இலத்தீன் மொழியில் 'ஏழு' எனப் பொருள் வரும் “செப்டம்” என்ற சொல்லே புராதன ரோமர்களின் காலண்டரில் ஏழாவது மாதத்திற்கு வழங்கப்பட்டது) அதன் பிறகு எட்டாவது மாதமாகியது.

ஜூலியஸ் சீசருக்குப் பிறகு வந்தவர்களில் அகஸ்டஸ் சீசர் மிகவும் புகழ் பெற்றவர். ரோமானியப் பேரரசைப் பரந்து விரிந்த சாம்ராஜ்யமாக நிறுவியவர் இவர். உலக வரலாற்றிலேயே மிகவும் புகழ்பெற்ற மன்னர்களில் ஒருவர். இவரை அக்டேவியஸ் என்றும் அழைப்பார்கள். கி.மு. முதல் நூற்றாண்டில் ரோமானியக் குடியரசைச் சீர்குலைத்த உள்நாட்டுப் போர்களை இவர் முடிவுக்குக் கொண்டு வந்தார்.

ஆட்சியைப் பிடிப்பதற்கான போராட்டத்தில் அக்டேவியஸ் ஈவிரக்கமின்றி நடந்து கொண்ட போதிலும், அவர் தமது அதிகாரத்தை நிலை நாட்டிய பின்பு, மிகவும் கனிவுடன் செயல்பட்டார். அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் சென்றார்.

உலக வரலாற்றில் இரக்க மனப்பான்மை கொண்ட ஓர் சர்வாதிகாரிக்கு அகஸ்டஸ் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார். தேர்ந்த அரசியல் மேதையாகவும் அவர் திகழ்ந்தார். அவரது சமரசக் கொள்கைகள், ரோமானிய உள்நாட்டுப் போர்களினால் விளைந்த பெரும் பிளவுகளை நீக்குவதற்கு உதவின. ரோமானியப் பேரரசை நாற்பதாண்டுகளுக்கு மேல் அகஸ்டஸ் ஆண்டார்.

கி.மு. 30 முதல், அகஸ்டஸ் ஆட்சியில் ரோமானியப் பேரரசில் உள்நாட்டு அமைதி நிலவியது. இதனால், நாட்டின் செல்வமும், வளமும் செழித்தோங்கின. கலைகள் வளர்ந்தன. அகஸ்டஸ் காலம் ரோமானிய இலக்கியத்தில் பொற்காலமாக விளங்கியது.

பண்டைய ரோமானிய காலண்டரின்படி லத்தீன் மொழியில் ஆறாவது மாதத்துக்கு 'செக்டிலஸ்' என்று பெயர். இதன் பொருள் ஆறாவது என்பதாகும். கி.மு. எட்டாம் நூற்றாண்டில் அலெக்ஸாண்ட்ரியா நகரை வென்ற அகஸ்டஸ் சக்ரவர்த்தியின் சிறப்பை வெளிப்படுத்தும் விதத்தில் இம்மாதத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டது. ஏற்கனவே இருந்த பத்து மாதங்களுடன் ஜூலையும் ஆகஸ்டும் சேர, 12 மாதங்களாயின. மாதத்துக்கு 30 அல்லது 31 நாட்கள் என்ற கணக்கும் இதன் பிறகு உருவாயிற்று. அதன் பிறகுதான் செப்டம் என்ற மாதம் ஒன்பதாம் மாதமானது.

மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி என்பது பண்டைய தமிழ்ப் பாடலில் வரும் ஒரு வரி. மன்னன் மிகவும் சக்தி படைத்தவனாக இருந்தால் மக்கள் மட்டுமல்ல, காலமும் காலண்டரும் கூட அவன் சொல்படி கேட்கும்!

பொர்.S.செந்தில் முருகன்
ஆசிரியர் குழு உறுப்பினர்




சென்னை, தியாகராய நகரில் 1.3 லட்சம் மின் நுகர்வோருக்கு ஸ்மார்ட் மீட்டர் வெற்றிகரமாக செயல்படுத்திய சாதனைக்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தங்க விருது ஸ்கோச் அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது!

மின் பயன்பாடு, துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு போன்ற செயல்முறைகள் முழுவதுமாக தானியக்கமாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மின்சார சேவைகளை நவீனமாக்கி, சிறப்பான மின் சேவைகளை வழங்க அடித்தளமிடப்பட்டுள்ளது.

## சீனியருடன் கண்ணன்– ஓர் சந்திப்பு

**கண்ணன்:** வணக்கம் சீனியர்..... பார்த்து..... ரொம்ப நாளாச்சு. இன்னைக்கு ரிவ்யூ மீட்டிங்காக....???

**சீனியர் :** கண்ணா ஆபீஸ் எப்படி இருக்கு? இப்பதான் வாராவாரம் ஒரு மீட்டிங் நடக்குதே. நாங்களும் வாராவாரம் வந்துட்டு தான் இருக்கோம்..... நீ தான் அடிக்கடி கேம்ப் போகிறதாலே..... உன்னை தான் பார்க்க முடியவில்லை... இன்றைக்கு என்ன கேம்ப் போகலயா?

**கண்ணன்:** ஆபீஸ்ல எல்லாமே பிரச்சனையாக இருக்கிறது...... ஆபீஸ்ல எப்பவும் டென்ஷனா இருக்கு சீனியர்..... சீனியர் எனக்கு ஒரு டவுட்டு!!!

**சீனியர் :** சொல்லு கண்ணா.....

**கண்ணன்:** சீனியர் இந்த முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்து ஆயிருச்சு சொன்னாங்களே அப்படின்னா..... என்ன சீனியர்?? அப்புறம் அதுல நம்ம சங்கம் கையெழுத்து போட்டது தப்புனு எங்க செ.பொ. சொல்றாங்க !!! அதுனால கையெழுத்து ஏன் போட்டாங்கனு கொஞ்சம் விவரமா சொல்லுங்க....

**சீனியர் :** நல்ல கேள்வி கண்ணா....!!! கையெழுத்து ஆனதுன்னு எப்படி தெரியும் உனக்கு....???

**கண்ணன்:** சீனியர் நம்ம ஜென்ரல்பாடி மீட்டிங் போயிருந்தேன் .... அங்க சொன்னாங்க.... கையெழுத்து போட்டாச்சு..... அப்புடின்னு....!! ஆனா அதில் என்ன பிரச்சனைன்னு எனக்கு ஒன்னும் புரியல சீனியர் அதனாலே கொஞ்சம் விவரமா சொன்னீங்கன்னா நல்ல இருக்கும்!

**சீனியர் :** கண்ணா.... நீ இப்ப எங்க வேலை செய்ற? உன் கம்பெனி பேர் சொல்லு?

**கண்ணன் :** TANGEDCO

**சீனியர் :** நல்லது முன்னாடி இது என்னவாக இருந்ததுன்னு தெரியுமா???

**கண்ணன் :** ஓ நல்லா தெரியும் சீனியர்... முன்னாடி தமிழ் நாடு மின்சார வாரியமா இருந்தது....

**சீனியர் :** கரெக்ட் தமிழ்நாடு மின்சார வாரியமாக இருந்தது அதுக்கு அப்புறமா அதை மூன்று கம்பெனிகளா பிளீச்சுட்டாங்க..... இப்படி பொது துறையாக இருக்கிறதை ஒன்றுக்கு மேற்பட்ட கம்பெனியாக பிரிக்க வேண்டும் என்று மின்சார சட்டம் கட்டாயமாக்கிறது..!! பிரிக்கும் போது பொதுத்துறையாக உள்ள மின் வாரிய ஊழியர்களின் பணிப்பாதுகாப்பு மற்றும் பணப்பயன்களை குறையின்றி தொடர்ந்திட..... மின்சார வாரியம், மாநில அரசு மற்றும் தொழிற்சங்கங்கள் இந்த மூன்று பேரும் இணைந்து ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும்.... அப்படினு மின்சார சட்டம் 2003 வலியுறுத்துகிறது. அதன்படி மாநில அரசும் 2010ம் ஆண்டு G.O.100 போட்டாங்க..... 2010 ல் இதை தொடர்ந்து தொழிற்சங்கங்கள் கூட்டுக்குழு அமைத்து விவாதித்து நமது சங்கத்தை ஓர் வரைவு ஒப்பந்தம் ஏற்படுத்தி தரும்படி கேட்டுக்கொண்டார்கள்.

**கண்ணன் :** ஏன் சீனியர் நமது சங்கத்தை தேர்தெடுத்தார்கள்.

**சீனியர் :** நாம் அகில இந்திய பட்டய பொறியாளர்கள் அமைப்பின் பொது செயலாளராக பதவி வகித்ததால் மற்ற மாநில பொறுப்பாளர்களுடன் நெருங்கிய தொடர்பு உண்டு அதனால் நமக்கு அந்த பொறுப்பை வழங்கினார்கள். பல மாநில அரசு ஒப்பந்த கருத்துருக்களை இணைத்து ஒரு வரைவு ஒப்பந்தத்தை ஏற்படுத்திய உடன் அனைத்து தொழிற்சங்கங்களுடன் இணைந்து அதை வாரியத்திடம் ஒப்படைத்தார்கள்.

இதன் தொடர்சியாக தொழிற்சங்கங்களும் மின்சார வாரியமும் ஒரு வரைவு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி மாநில அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் அரசு முழு பொறுப்பு ஏற்க தயக்கம் காட்டியது. அவர்கள் சில மாற்றங்களை செய்து அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் வரைவு அளித்து பின்னர் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்த பேச்சுவார்த்தையில் தொழிற்சங்கங்களும் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தார்கள் ஒப்பந்தத்தில் செய்ய வேண்டிய பல மாற்றங்கள் குறித்து தனித்தனியே கடிதங்களையும் 2012 யில் வாரியத்திடம் ஒப்படைத்தார்கள்.

தொழிற்சங்கங்கள் கோரிய பல மாற்றங்களை ஏற்க இயலாது என அரசு தெரிவித்தது ஒரு சில மாற்றங்களை மட்டுமே மேற்கொள்ள சம்மதித்தார்கள். 2020 ல் திருத்தப்பட்ட ஒரு வரைவு ஒப்பந்தத்தை அரசு அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் தொழிலாளர் நல வாரியம் வழியாக (லேபர் டிபார்ட்மென்ட் வழியாக) 27 அம்சங்களில் தங்களின் ஏற்பு மற்றும் மறுப்பு விவர கருத்துருக்களை தெரிவிக்கும்படி கோரப்பட்டது.

இது குறித்து கூட்டு நடவடிக்கை குழு ஆலோசனைகளை மேற்கொண்டு ஏழு கருத்துருக்களின் நமது ஏற்பு மற்றும் மறுப்பு கருத்துருக்களை மின்சார வாரியம் மூலம் தெரிவித்தோம்.

மீண்டும் 2023 எரிசக்தி துறை வழியாக 8 அம்சங்களில் அரசின் நிலைப்பாட்டை தெரிவித்து வரைவு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

மேலும் நிர்வாகம் ஒரு வார காலத்தில் ஒப்பந்தம் ஏற்படுத்திட கருத்துரு வழங்கிட நிர்பந்தத்தை உருவாக்கியது.

அனைத்து தொழிற்சங்கங்கள் தத்தம் நடவடிக்கைகள் மேற்கொண்டனர். உடனடியாக சங்கம் களத்தில் ஈடுபட்டு அனுபவம் மிக்க பொறியாளர்கள், மையப் பொறுப்பாளர்கள், மூத்த பொறியாளர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் என அனைவரையும் கலந்து ஆலோசனை பெற்று 6 மாற்றங்களை கோரியது, அதில் வெற்றிகரமாக முக்கியமான 4 மாற்றங்களை திருத்தப் பெற்று கேங்மேன் முதல் தலைமை பொறியாளர் வரை உள்ள இன்றைய பணியாளர்களின் பணப்பயன், பணிபாதுகாப்பு மற்றும் ஓய்வூதியத்தையும் உறுதிப்படுத்தியுள்ளது.

2010 முதல் 2024 வரை 14 ஆண்டுகள் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரலாற்று சிறப்பு மிக்க முத்தரப்பு ஒப்பந்தம் 12.02.2024 அன்று வெற்றிகரமாக கையெழுத்தானது. புரிஞ்சுதா கண்ணா...

**கண்ணன்:** புரிஞ்சுது சீனியர். ரொம்ப நன்றி. மீண்டும் சந்திப்போம்.

பொர்.உ. ராஜேந்திரன்
மின் அலை ஆசிரியர்

**Congratulations to TTPS Team**

It is very glad to inform that Unit-I of TTPS has successfully completed 43 year of service and significant beginning of its 44 nd year of service today since its inception on 09.07.1979.

Congratulations to the valued and dedicated team of Engineers, Staff, Contractors, Suppliers, Contract Labours, Police Department, Fire Service , TEXCO who are behind the success...

My heart felt wishes to one and all...CE/TTPS

Er. Nattar Raja Br.Sec. / TTPS

## தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முதலாவது
## "மிக உய்ய அனல் மின் திட்டம்"

தமிழகத்தின் தலைநகர் "சிங்கார" சென்னையின் வடக்கில் உள்ள திருவள்ளூர் மாவட்டத்தின் "அத்திப்பட்டு" என்னும் கிராமத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான நிலையம் தான் வடசென்னை அனல் மின் நிலையம்.

1994–இல் 210மெகாவாட் திறனுடைய மூன்று அலகுகளை கொண்ட வடசென்னை அனல் மின் நிலையம் உற்பத்தியை தொடங்கி, இன்று வரை முழு இயக்கத்தில் உள்ளது.

அடுத்ததாக 2014–இல் 600மெகாவாட் திறனுடைய இரண்டு அலகுகளை கொண்ட வடசென்னை அனல் மின் நிலையம்–II மின் உற்பத்தியை தொடர்ந்து மின் தொகுப்பிற்கு வழங்கி கொண்டிருக்கிறது.

இதற்கெல்லாம் முன்னோடியாக, 1970 ல் தொடங்கி 450 மெகாவாட் மின்சாரத்தை மின் தொகுப்பிற்கு வழங்கி வந்த எண்ணூர் அனல் மின் நிலையம் கடந்த 2016ல் ஆயுள் முடிந்த காரணத்தால், தனது உற்பத்தியை முற்றிலுமாக நிறுத்தி கொண்டுவிட்டது.

இதற்கிடையே அசூர வேகத்தில் அதிகரித்து வரும் சென்னை மாநகரத்தின் மின் தேவையை பூர்த்தி செய்வதில் வடசென்னை அனல் மின் நிலையங்களின் பங்கு பெரிதாக இருந்தாலும், எதிர்கால தேவையை கருத்தில் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருப்பதினாலும், ஏற்பட்ட திட்டங்களில் ஒன்றுதான் வடசென்னை அனல் மின் நிலைய திட்டம்–III, இது 800மெகாவாட் திறனுடைய ஒற்றை அலகை கொண்ட அனல் மின் திட்டமாகும்.

வடசென்னை அனல் மின் நிலையம்–I மற்றும் II அமைந்துள்ள வளாகத்தின் அருகிலேயே சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் வடசென்னை அனல் மின் திட்டம்–III அமைக்க தமிழக அரசால் 2010–ம் ஆண்டில் திட்டமிடப்பட்டது.

சுமார் ரூ.10,158/– கோடி செலவில் 2016–ம் ஆண்டில் துவங்கிய வடசென்னை அனல் மின் திட்டம்–III இன் கட்டுமான பணி "கொரோனா" என்ற கொடிய நோய் உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகளில் சிக்கி சின்னாபின்னமாகி மிகவும் மந்தகதியில் நடைபெற்றது. 2020–ம் ஆண்டில் மின் உற்பத்தி துவக்க "இலக்கு" நிர்ணயிக்கப்பட்டு, கட்டுமான பணிகளை M/s.B.H.E.L மற்றும் M/s.B.G.R என்ற இரு ஒப்பந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன. அனல் மின் நிலையத்தின் முக்கிய பாகங்களான கொதிகலன், சுழலி, மின்னாக்கி (BOILER TURBINE GENERATOR) ஆகியவற்றின் கட்டுமான பணிகளை M/s.B.H.E.L நிறுவனமும், நிலையத்தின் ஏனைய பாகங்களின் (BALANCE OF PLANT) கட்டுமான பணிகளை M/s.B.G.R நிறுவனமும் மேற்கொண்டன. திட்டமிட்ட காலத்திற்குள் மின் உற்பத்தியை துவங்க மின்சார வாரியம் மேற்கொண்ட அனைத்து வழி வகைகளையும் தாண்டி, நடப்பு 2024–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7–ந் தேதியன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு நாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

இது தமிழ்நாடு மின்சார வாரிய வரலாற்றில் நிறுவப்பட்ட முதலாவது "மிக உய்ய அனல் (SUPER CRITICAL) மின் திட்டமாகும்"

வடசென்னை மிக உய்ய அனல் மின் நிலையம் –III இல் உற்பத்தியாகும் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 0.45 கிலோ கிராம் நிலக்கரி மட்டும் போதுமானது. மேலும் நிலையத்திலிருந்து வெளியேறும் கார்பன் டை ஆக்சைடு (Co2) வின் அளவு சுமார் 25 சதவீத அளவிற்கும் குறைவான வடிவமைப்பு கொண்டது. இதனால் சுற்றுப்புற சூழல் பாதிப்பும் குறைகிறது.

வடசென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்–III இல் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அருகிலுள்ள 765கிலோவோல்ட் மின்வழி தடத்தில் இணைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. தற்சமயம் நாளொன்றுக்கு 19.2Mu மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

பலவிதமான சோதனை ஓட்டங்களை படிப்படியாக கடந்து வடசென்னை மிக உய்ய அனல் மின்நிலையம்–III தனது முழு உற்பத்தி திறனான 800 மெகாவாட்டை கடந்து 27.06.2024 அன்று அடைந்துள்ளது என்பது மகிழ்ச்சி தரும் செய்தி. விரைவில் வர்த்தக ரீதியில் தனது முழு உற்பத்தி திறனை வழங்கி, அதிகரித்து வரும் சென்னை மாநகரின் மின் தேவையை பூர்த்தி செய்வதோடு, சென்னை வாழ் மக்களின் சுற்றுப்புற சூழலை பாதுகாக்கவும் வேண்டும் என்பதே மின்சார வாரியத்தின் நோக்கமாகும்.

பொர்.தா.சுகுமார்,
செயலாளர் / அனல் மின் உற்பத்தி

**01.05.1999 ஒரு வரலாற்று நிகழ்வு**

தூத்துக்குடி, மேட்டூர் எண்ணூர், வடசென்னை அனல் மின் நிலையங்கள் மற்றும் புனல் மின் நிலையங்களில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக தினக்கூலி அடிப்படையில் (Daily Wages) ஒப்பந்தப்பணியாளர்கள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பணியாற்றி வந்தனர். குறைந்த சம்பளத்தில் கடினமான வேலைகளை செய்துவரும் ஒப்பந்த பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று பொறியாளர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் நீண்ட நாட்களாக வாரியத்திற்கும் அரசுக்கும் கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் ஒப்பந்தப்பணியாளர்கள் அடையாளம் காணப்பட்டு அனல் மற்றும் புனல் மின் நிலையங்களில் தொடர்ந்து 480 நாட்கள் ஒப்பந்தப்பணியாளர்களாக பணியாற்றி வருபவர்களின் விபரங்கள் கேட்கப்பட்டு. சுமார் 10250 ஒப்பந்தப்பணியாளர்கள் 01.05.1999 முதல் தமிழக அரசால் பணிநிரந்தரம் செய்யப்பட்டனர். தற்போது அவரவர் கல்வித்தகுதிக்கேற்ப களப்பணிகளிலும் அலுவலப்பணிகளிலும், பொறியாளர்களாகவும் 25 ஆண்டுகள் பணியாற்றி வெள்ளிவிழா கண்டு மின்வாரியத்தை ஒளிரச்செய்கின்றனர்.

25 ஆண்டுகள் செவ்வனே பணியாற்றி வெள்ளிவிழா கண்டு மின்வாரியத்தை ஒளிரச் செய்கின்றனர்.... 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற வாரிய பணி செய்ததற்கு சான்றிதழ் மற்றும் பணப்பயன் ரூ 2,000/– பெற்றுள்ளார்கள். இதுவரை சான்றிதழ் மற்றும் பணப்பலன் பெறாதவர்கள் உடனே பெற்றுக்கொள்ள கோரப்படுகிறது.
பொறியாளர் சங்கம் இவர்களது பணியை மனதாரப் பாராட்டுகிறது.

## சங்கப் பணி ஓய்வு பாராட்டு விழா

வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பொர்.G.கார்த்திகேயன், முன்னாள் பொதுப்பொருளாளர், பொர்.C.ருத்ரகுமார், முன்னாள் செயலாளர் / நிர்வாகம், பொர்.T.சுகுமார், செயலாளர் /அனல் உற்பத்தி ஆகியோரது சங்கப் பணி பாராட்டு விழா சென்னை வடக்கு மற்றும் தெற்கு மண்டல கிளைகள் சார்பாக 17.07.2024 அன்று இராயப்பேட்டையில் நமது தலைமையக சங்க பொன்விழா கட்டிடத்தில், நடைபெற்றது.

கூட்டத்திற்கு சங்கத்தின் மாநில தலைவர் பொர்.A.அந்தோணிபடோவராஜ் அவர்கள் தலைமை வகித்தார். பொர்.V.S.சம்பத்குமார், பொதுச் செயலாளர், பொர்.N.R.செந்தில், பொதுப் பொருளாளர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்தாய் வாழ்த்துடன் விழா இனிதே துவங்கியது. சென்னை வடக்கு மண்டல செயலாளர் பொர்.R.தமிழ்செல்வன் அவர்கள் விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றார். விழா நாயகர்களுக்கு பொன்னாடையும், மாலையும் அணிவித்து வரவேற்றார்.

வடசென்னை அனல் மின் நிலையத்தின் ஓய்வு பெற்ற திரு.S.கிருஷ்ணன் தொழிலாளர் நல அலுவலர் (LWO) அவர்கள் கலந்துகொண்டு விழா நாயகர்களை கௌரவித்தார்கள். விழாவில் சென்னை மண்டல கிளைகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

பொர்.R.தணிகை செல்வன், செயலாளர் / வேலூர் மண்டலம், பொர்.R.நடராஜன், பொதுக்குழு உறுப்பினர் / திருவண்ணாமலை, பொர்.R.K.நரசிம்மன், தலைமை இரத்ததான ஒருங்கிணைப்பாளர், பொர்.E.திருநீலகண்டன், கிளைச் செயலாளர் / ஈரோடு, பொர்.T.S.ரமேஷ், முன்னாள் மண்டல செயலாளர் /வேலூர், பொர்.P.கபிலன், முன்னாள் காமதேனு நலநிதி செயலாளர், பொர்.A.சரவணக்குமார், பொதுக்குழு உறுப்பினர்/ காஞ்சிபுரம், பொர்.K.சங்கர், கிளைச் செயலாளர் / செங்கல்பட்டு, பொர்.R.பாலகிருஷ்ணன், கிளை செயலாளர்/ வடசென்னை அனல் மின் நிலையம், பொர்.S.கோமதிநாதன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர்/ நெல்லை (ஓய்வு), பொர்.B.நந்தகுமார், முன்னாள் கிளை தலைவர் / சென்னை வடக்கு (ஓய்வு) பொர்.S.ரத்தினமனோகர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் / சென்னை வடக்கு (ஓய்வு) பொர்.K.கார்த்திகேயன், கிளைச் செயலாளர் /சென்னை மேற்கு, பொர்.N.சத்திய நாராயணன், முன்னாள் மண்டல செயலாளர் / சென்னை தெற்கு, பொர்.R.சோமேஸ்வரன், பொதுக்குழு உறுப்பினர் / சென்னை தெற்கு, பொர்.N.கந்தசாமி, முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் (ஓய்வு), பொர்.V.கார்த்திகேயன், கிளை தலைவர் / செங்கல்பட்டு, பொர்.K.S.ரமேஷ், செயலாளர் /அலுவலகம், பொர்.S.பாலாஜி, செயலாளர் / வலைத்தளம், பொர்.K.ரவிச்சந்திரன், முன்னாள் செயலாளர் / நிர்வாகம் (ஓய்வு), பொர்.C.நரசிம்மன், செயலாளர் / திருச்சி மண்டலம், பொர்.K.சகாயராஜ், முன்னாள் காமதேனு நலநிதி செயலாளர் (ஓய்வு), பொர்.A.P.ராகேஷ் / காமதேனு நலநிதி பொருளாளர், பொர்.V.சுரேந்திரபாபு, முன்னாள் செயலாளர் /வேலூர் மண்டலம் (ஓய்வு) பொர்.R.சந்தோஷ்குமார், காமதேனு நலநிதி செயலாளர், பொர்.M.சேகர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் / செங்கல்பட்டு, பொர்.S.பாலசுப்பிரமணியன், செயலாளர் /நிர்வாகம் TNEBRES, பொர்.U.ராஜேந்திரன், செயலாளர் /வெளியீடு, பொர்.P.M.மாரியப்பன், செயலாளர் / தலைமை நிலையம், பொர்.G.முரளிகிருஷ்ணன், செயலாளர் /அமைப்பு TNEBRES, பொர்.R.வள்ளிராஜன்,

பொதுச் செயலாளர் /TNEBRES, பொர்.N.R.செந்தில், பொது பொருளாளர், பொர்.S.ஜெயசிங்ராஜா, தலைவர் / TNEBRES, பொர்.V.S.சம்பத் குமார், பொதுச் செயலாளர் ஆகியோர் விழாவின் நாயகர்களான மூன்று பொறுப்பாளர்களின் தொழிற்சங்க சேவை, வாரியப்பணி மற்றும் தன்னலமற்ற சங்கபணி செயல்பாடு ஆகியவற்றினை குறிப்பிட்டு பாராட்டி வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர்.

சென்னை வடக்கு மற்றும் சென்னை தெற்கு மண்டல கிளைகளின் சார்பாக விழா நாயகர்களுக்கு நினைவு பரிசு வழங்கி சிறப்பு செய்யப்பட்டது. பின்னர் பொர்.T.சுகுமார், செயலாளர் / அனல் உற்பத்தி மண்டலம், பொர்.C.ருத்ரகுமார், முன்னாள் செயலாளர் / நிர்வாகம், பொர்.G.கார்த்திகேயன், முன்னாள் பொதுப் பொருளாளர் ஆகியோர் ஏற்புரை வழங்கினார்கள்.

பொர்.J.வெங்கடேசன், செயலாளர் / சென்னை தெற்கு மண்டலம் அவர்கள் விழாவில் பங்கேற்ற பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் விழா குழுவினரையும் நன்றி பாராட்டி அகம் மகிழ்ந்தார்.

பின்னர் நாட்டுப்பண்ணுடன் பாராட்டு விழா இரவு 8 மணி அளவில் இனிதே நிறைவுற்றது.

பொர்.R.தமிழ்ச்செல்வன்,
செயலாளர் / சென்னை வடக்கு மண்டலம்

## வெற்றிக்கான வழி

எதிர்பார்த்துக் கொண்டு இருந்தால் எதுவும் கிடைத்து விடாது, எதிர்கொண்டால் மட்டுமே எதுவும் எளிதில் கிடைக்கும்.

நிதானம் என்னும் அற்புதமான ஆயுதத்தைப் பயன்படுத்துபவர்கள் எதையும் சாதிப்பார்கள், மாற்றத்தைத் தேடுபவர்கள் மாறாத வரை மாற்றங்கள் நிகழப்போவதில்லை.

பாதையில்லை என்று பயப்படக் கூடாது, பாதையை உருவாக்கத் தான் நாம் பிறந்திருக்கிறோம் என்று நம்ப வேண்டும்.

எவ்வளவு கவலைகள் வந்தாலும் அதைக் கண்டு கொள்ளாதவரின் வாழ்க்கை எப்போதும் மிகச் சிறப்பாக இருக்கும்.

எதை இழந்தீர்கள் என்பது முக்கியமல்ல என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.

இழந்ததற்கு வருந்த வேண்டும் என்றால் வாழ் நாள் போதாது. ஆகையால் அச்சம் இருக்கும் வரை, முன்னேற்றத்திற்கு இடம் இல்லை. முயற்சி இருக்கும் வரை, பின்னடைவுக்கு இடமில்லை.

தன்னம்பிக்கை இருக்கும் வரை, தோல்விக்கு இடமில்லை. வாய்ப்புகளை தேடிக் கொண்டே இருக்க வேண்டும்.

நம்மிடம் திறமை உள்ளது என்ற நம்பிக்கையோடு செயல்படும் போது, நாம் செய்யும் எந்தச் செயலும் தனித்தன்மை மிக்கதாக அமைந்து, வெற்றி உறுதி செய்யப்படுகின்றது.

அதாவது கடல் அலையில் உப்பு தெரிவதில்லை ஒதுங்கும் நீரில் உருவாக்கப்படுகிறது.அது போல் நம்மிடம் இருக்கின்ற வழிகளை பயன்படுத்திக் கொண்டே இருந்தால்

## ஆந்திராவின் புதிய ஓய்வூதிய திட்டம்

2004 ஆம் ஆண்டு புதிய ஓய்வூதிய திட்டம் "நேஷனல் பென்ஷன் ஸ்கீம்" அறிமுகப்படுத்தப்பட்டது பழைய ஓய்வூதிய திட்டத்தில் மாதந்தோறும் குறைந்தபட்ச 10 ஆண்டுகள் பணியில் இருந்தவர்களுக்கு அவர்கள் கடைசியாக பெற்ற ஊதியத்தில் 50% ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டத்தில் பணியாளர்கள் பங்கு ஏதுமில்லை அரசே சொந்த நிதியில் இருந்து ஓய்வூதியம் வழங்குகிறது.

புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பணியாளர்கள் குறிப்பிட்ட தொகையை மாதம் தோறும் 60 வயது வரை செலுத்த வேண்டும். இதன் அடிப்படையில் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும். புதிய தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பணியாளர்கள் 10% மும் அரசு 14% மும் அடிப்படை ஊதியத்தில் இந்த ஓய்வூதிய நிதியத்துக்கு வழங்குகிறார்கள். இந்த நிதி பங்கு சந்தைகளில் முதலீடு செய்யப்படுகிறது கிடைக்கின்ற வருவாயின் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது ஓய்வுக்குப் பிறகு பணியாளர் தன்னுடைய நிதியில் இருந்து 60% நிதி திரும்பப் பெற்றுக் கொள்ளாமல் மீதமுள்ள 40% தொகையை பங்குச்சந்தைகளில் முதலீடு செய்யலாம்.

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து விட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வர வேண்டுமென கோரிக்கைகள் நாடெங்கிலும் எழுப்பப்பட்டன. புதிய ஓய்வூதிய திட்டத்தை பல மாநில அரசுகள் பின்பற்றவில்லை.

இந்த சூழலில் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தாமல் புதிய திட்டத்தில் சில மாற்றங்களை கொண்டு வர 2023 ஆம் ஆண்டு நிதித்துறை செயலாளர் தலைமையில் ஆய்வுக் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது. அக்குழு 2023 ஆம் ஆண்டு மே மாதம் தன்னுடைய அறிக்கையை அரசுக்கு அளித்தது. இந்த அறிக்கை ஆந்திர பிரதேச ஓய்வு ஊதியத்தை பெருமளவு சார்ந்து இருப்பதாக கருதப்படுகிறது. இதில் மத்திய அரசு சில மாற்றங்களை கொண்டு வர முடிவு செய்துள்ளது.

ஆந்திரபிரதேசம் நிலையான ஓய்வூதிய திட்டத்தை அண்மையில் அறிவித்துள்ளது. THE ANDHRA PRADESH GUARANTEED PENSION SYSTEM ACT (2023) என்று இத்திட்டம் அழைக்கப்படுகிறது. ஆந்திர அரசு திட்டத்தில் ஓய்வு பெறுபவர்கள் 50% ஊதியத்துடன் அதற்குண்டான பஞ்சபடியையும் சேர்த்து ஓய்வூதியமாகப் பெறுவர்.

**பலன்கள்**

"நேஷனல் பென்ஷன் ஸ்கீம்" ஓய்வூதியத் திட்டத்தின்படி 50% ஊதியம் ஓய்வூதியமாக கிடைக்காவிட்டால், பணியாளருக்கு அந்தத் தொகை ஈடு செய்யப்படும். குறைந்தபட்சம் ரூபாய் 10,000 ஓய்வூதியம் பெற நடவடிக்கை எடுக்கப்படும். மருத்துவ உதவி திட்டங்கள் அறிவிக்கப்படும்.

நடைமுறையிலுள்ள இத்திட்டத்தின்படி, பணியாளர் ஓய்வு பெறும் போது அவருடைய ஓய்வூதிய நிதியில் இருந்து 60% அளவிற்கு பெறுகிறார், மீதமுள்ள 40% பங்குச்சந்தைகளில் முதலீடு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் ஓய்வூதியம் 50% குறைந்தால் பற்றாக்குறை நிதியை, ஓய்வூதிய நிதியத்துக்கு அரசே வழங்கும். இதனால் ஓயவூதியதாரர்களுக்கு மாதந்தோறும் உறுதியாக 50% ஊதியம், ஓய்வூதியமாகக் கிடைக்கும்.

**தகுதிகள்**

இத்ததிட்டத்தின் பலன்களைப் பெற, பணியாளர் ஓய்வு பெறும்போது 10 ஆண்டுகாலம் பணி புரிந்திருக்க வேண்டும். தானாக பணி ஓய்வு பெறுபவர்கள் 20 ஆண்டுகாலம் பணி செய்து இருக்க வேண்டும். கட்டாய ஓய்வு பெறுபவர்கள் 33 ஆண்டுகாலம் பணி செய்து இருக்க வேண்டும். மருத்துவ காரணங்கள் வேலை இழப்பவர்கள் 10 ஆண்டுகாலம் பணி செய்து இருக்க வேண்டும். தாமாக பதவி விலகுவது, அரசு வேலையை விட்டு நீங்குவது ஆகியவற்றிற்கு உட்பட்டவர்களுக்கு இத்ததிட்டத்தின் பலன்கள் கிடைக்காது.

இந்தத்திட்டத்தினால் அரசினுடைய செலவினங்கள் அதிகரிக்கும் என சில நிதித்துறை நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பொர்.சா. கண்ணன்
முன்னால் மாநில துணை தலைவர்

## மணந்தனர் வாழ்த்துகிறோம்

மணமகன் வீட்டார்:

**திரு. பா.சந்திரசேகர்**
JE I / Flying Squad / HQ / TNEB (Ph: 94442 07675)
சென்னை தலைமையக கிளை
**திருமதி. ச.சந்தானலக்ஷ்மி**
ஆகியோரின் மகன் திருநிறைச்செல்வன்
**ச.சந்தான கிருஷ்ணன்** B.E.



மணமகள் வீட்டார்:

**திரு. K.கண்ணன்**
**தெய்வதிருமதி. சிவகாமசுந்தரி**
**திருமதி. K.பவுனு**
ஆகியோரின் மகள் திருநிறைச்செல்வி
**க.உஷாநந்தினி** B.Sc (Nursing)

**சுபமுகூர்த்தம் :** 12.07.2024
இடம் : லக்ஷ்மி நாராயண மஹால், பழைய பெருங்களத்தூர்

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

**மின் அலை வளர்ச்சி நிதி ரூ.500/– அளித்துள்ளார், நன்றி.**

# பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 30.06.2024 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. Er. T. SUKUMAR JE I / E / EM II / NCTPS II / Secretary Generation / Thermal NCTPS Branch. 9962300507
2. Er. N.SHUNMUGAM AEE / O&M / Kanji / Branch President / Thiruvannamalai Branch. 9790413090
3. Er. P.SELVAN AEE / Shift / 230 KV Neyveli Auto SS / Branch President / Cuddalore Branch. 9092169053
4. Er. S.BASKAR AEE / Mtce. / 230 KV SP. Koil SS / Vice President / Chengalpattu Branch. 9962525409
5. Er. A.GANESAN EE / Operation TRANSCO / Valuthur Former VP / Dindigul Ramnad Branch. 82206 73355
6. Er. S.JOHNPETER AEE General / Pudukkottai / Former Joint Secy / Pudukkottai Branch. 8525062614
7. Er.M.SUBRAMANIYAN AEE / O&M / Viralimalai / Former Division Secy / Pudukkottai Branch. 9790640872
8. Er. A.BRITTO JE / Mtce. / 110 KV Thuvakudy SS / Former Division Secretary / Manapparai Trichy Branch. 63802 01296
9. Er. P.PUSHPAM EE / Operation 400 KV SS / K.R.Thoppur / Mettur Branch. 8610217521
10. Er. R.SANTHAMOORTHY AEE / Shift / 230KV ETPS SS / Chennai North Branch. 94456 78587
11. Er. P.RAMADOSS AEE / E / Div. IV / NCTPP- III / NCTPS Branch. 9944309974
12. Er. V.ANANTHA PADMANABAN AEE / P&C / Trichy / Trichy Branch.94866 86803
13. Er. M.KAMALANATHAN AEE / Shift / 400 KV Sriperimbudur SS / Chengalpattu Branch. 8248355033
14. Er. C.MANI AEE / Shift / 230 KV Acharapakkam SS / Chengalpattu Br. 9444752243
15. Er. M.RAMESH AE / O&M / Alandur / Chennai South Branch. 9444953891
16. Er. D.EUGENE JE I / E / EM II / NCTPS- II / NCTPS Branch. 9445669981
17. Er. C.MANIMARAN JE I / Shift / 110 / 33 / 11 KV SS Koothur / Perambalur Branch. 9715944903
18. Er. P.MURUGAN JE I / O&M / Munisalai / Former Division Secy / Madurai Br. 9629943887
19. Er. G.CHANDRASEKARAN JE I / 110KV SS / Kavandhapadi / Erode Br. 94438 94815
20. Er. K.CHANDAR JE I / Mtce. / 110KV Urban Kumbakonam SS / Thanjavur Branch. 9003305264
21. Er. K.SRINIVASAN JE I / 110 / 22KV Karaikudi SS / Sivagangai Branch. 9443484418
22. Er. V.VENKATESAN JE I / O&M / Vanamadevi / Cuddalore Br. 9842168133

## ஜூலை மாதத்தில் நடந்த மாதாந்திர கூட்டங்கள்

சங்க ஆண்டு பொதுக்குழுவில், அனைத்து கிளைகளும் மாதம் தோறும் முதல் செவ்வாய்க்கிழமை அன்று கிளை செயற்குழு மற்றும் அந்த பகுதியின் மாதக் கூட்டங்களை நடத்தவேண்டும் என்றும், மண்டலக் கூட்டங்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடைபெற வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து ஜூலை மாதத்தில் கீழ்கண்ட மண்டலங்கள் மற்றும் கிளைகள் கூட்டங்களை நடத்தியுள்ளன. அதற்கு பாராட்டுக்கள். இம்மாதம் கூட்டம் நடத்த இயலாத கிளைகள் வரும் மாதங்களில் தவறாமல் நடத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மண்டலக் கூட்டங்கள் நடைபெற்ற மண்டலங்கள்:

சென்னை வடக்கு, சென்னை தெற்கு, தஞ்சாவூர் மற்றும் மதுரை.

கிளைக் கூட்டங்கள் நடைபெற்ற கிளைகள் :

சென்னை வடக்கு, சென்னை மையம், சென்னை மேற்கு, சென்னை வளர்ச்சி வட்டம், சென்னை தலைமையகம், வட சென்னை/ எண்ணூர் அனல் மின்நிலையம், சென்னை தெற்கு, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கோவை, ஈரோடு, கோபி, சேலம், மேட்டூர், மேட்டூர் அனல் மின்நிலையம், கரூர், நாமக்கல், மதுரை, இராமநாடு, திண்டுக்கல், தஞ்சை, நாகை, திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி அனல், விருதுநகர், கன்னியாகுமரி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, தர்மபுரி, திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம்.

– மாநில அமைப்பு செயலாளர்

# கண்ணீர் அஞ்சலி

**பொறியாளர்கள்**

1. 09.07.2024 பொர்.K.தியாகராஜன் இளநிலைப் பொறியாளர் / 110 கி.வோ. மோசிவாக்கம் துணை மின்நிலையம் / செங்கல்பட்டு கிளை அவர்கள்.
2. 24.07.24. பொர்.R. கணேசன் இளமின் பொறியாளர் II நிலை / 110/–11 கி.வோ துணைமின் நிலையம் / முடங்கியார் இராசபாளையம்/விருதுநகர் கிளை அவர்கள் 9585808086

பொறியாளர்களின் மறைவிற்கு பொறியாளர் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**பொறியாளர் குடும்பத்தினர்**

1. 02.07.2024 பொர்.S.சண்முகம், AEE / O&E / MTPS1 (Then AEE / EM2 / MTPS1 / மேட்டூர் கிளை அவர்களின் **தந்தையார்** அவர்கள் – 99408 70245.
2. 04.07.2024 பொர்.P.S.அரி, உதவி செயற் பொறியாளர் / தலைமையகம் துணை மின் நிலையம் / சென்னை மைய கிளை அவர்களின் **தந்தையார்** அவர்கள். 99401 89008
3. 17.07.2024 பொர்.J.நந்தகுமார், LI / 110 கி.வோ. துணை மின்நிலையம் விழுப்புரம், விழுப்புரம் கிளை அவர்களின் **தாயார்** அவர்கள் – 93442 51678
4. 18.07.2024 பொர்.M.தங்கவேல், AEE/PPP சென்னை தலைமையக கிளை அவர்களின் **தாயார்** அவர்கள் – 94444 43356.






# 56வது மாநில பொதுக்குழுவில் உரையாற்றிய பொதுக்குழு உறுப்பினர்கள்






**MIN ALAI - July 2024 RNI No. TNBIL / 2012 / 47622**
**Printed Book Periodical**









Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by: T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St, 1st Lane, Kondithope, Chennai - 600079.
Edited by: U. Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam